DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 31/2024 Crime No. 412/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW4- கார்த்தி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 13.11.2024 |

**எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை-**

நான் குருப்பநாயக்கன்பாளையத்தில் குடியிருந்துகொண்டு லேத் ஓர்க்ஷாப் வைத்துள்ளேன். தேதி மாதம் நினைவு இல்லை. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சிவசக்கி மாவு மில் முன்பாக விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். அன்றைய தினம் மாலை நான் அந்த வழியாக சென்று கொண்டிருந்த போது போலிசார் அங்கு நடைபெற்ற விபத்து தொடர்பாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு வந்த போலிசார் சம்பவ இடத்தை விசாரித்து பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் மடிக்கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுத்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன்.